

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.12.2024) தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில், தமிழ்நாட்டில் உள்ள தொன்மையான கிறித்தவ தேவாலயங்கள், இஸ்லாமிய பள்ளிவாசல்கள், தர்காக்களை புனரமைத்தல், பழுதுபார்த்தல் பணிகளை மேற்கொள்ள அரசு நிதி உதவி அளித்தல் மற்றும் கிறித்தவர்களுக்கான கல்லறைத் தோட்டம் மற்றும் இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான்களுக்கு புதிதாகச் சுற்றுச்சுவர், பாதை அமைத்தல், புனரமைத்தல் பணிகளை மேற்கொள்ள அரசு நிதி உதவி வழங்கும் திட்டங்களின் கீழ் 3 கோடியே 61 இலட்சத்து 82 ஆயிரத்து 208 ரூபாய்க்கான காசோலைகளை தேவாலயங்கள் மற்றும் தர்காக்களின் நிர்வாகிகளிடம் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் எஸ்.எம். நாசர், நாடாளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், மரு. தாரேஸ் அஹமத், முனைவர் சீ.சுரேஷ் குமார், திருமதி. மு. ஆசியா மரியம், ஜோ. அருண், சி. பெர்னான்டஸ் ரத்தின ராஜா, கிறித்தவ தேவலாயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தின் தலைவர் திருமதி விஜிலா சத்தியானந்த் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (13.12.2024) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் புதுதில்லியில் நடைபெற்ற மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்தின் விருதுகள் வழங்கும் விழாவில், தமிழ்நாட்டின் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்ட ஐந்து விருதுகளை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன். கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர். ந. சுப்பையன் மற்றும் கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, சேலம் உருக்காலை அங்கீகாரத் தேர்தலில் தொடர்ந்து மூன்றாவது முறையாக வெற்றி பெற்ற தொ.மு.ச. நிர்வாகிகளான சிவகுமார், செந்தில்குமார், துரைராஜ், பாரதிராஜா மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகளான ரவிச்சந்திரன், பூபாலன் சுந்தரகிருஷ்ணன், கதிர்வேல் ஆகியோர் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று (13–12–2024) நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். அதுபோது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், சேலம் மத்திய மாவட்டச் செயலாளரும் –அமைச்சருமான ஆர்.இராஜேந்திரன், தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராஜன், சேலம் மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் தலைவர் வி.மணி ஆகியோர் உடனிருந்தனர்.

### வகுப்புவாதத்தை தூண்டும் வகையில் பேசிய

# அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதிக்கு எதிராக தகுதி நீக்க நோட்டீஸ்!

## நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் சார்பில் கொடுக்கப்பட்டது!

புதுடெல்லி, டிச. 14 –

வகுப்புவாதத்தை தூண்டும் வகையில் பேசிய அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி சேகர் குமார் யாதவை தகுதி நீக்கம் செய்யக் கோரி நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சிகள் சார்பில் நோட்டீஸ் கொடுக் கப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம் பிர யாக்ராஜில் கடந்த 8 ஆம் தேதி நடைபெற்ற விஷ்வ ஹிந்து பரிஷத் மாநாட்டில் அலகாபாத் உயர்நீதி மன்ற நீதிபதி சேகர் குமார் யாதவ் கலந்து கொண்டார். அப்போது பேசிய அவர் பெரும்பான்மையின ரின் விருப்பப்படி இந்த நாடு செயல் படும், இதுதான் சட்டம், பெரும் பான்மைக்கு ஏற்ப சட்டம் செயல்படுகிறது என்றும் சர்ச்சைக் குரிய கருத்துக்களை தெரிவித் தார். மேலும் பசுக்களை பாதுகாப் பது இந்துக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்று என்றும் அவர் தெரிவித்தார். அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதியின் இந்த பேச்சு சர்ச்சைக்குள்ளானது... இத னைத் தொடர்ந்து நீதிபதி சேகர் குமார் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு பல்வேறு தரப்பினரும் கடிதங்களை அனுப்பினர்

இந்நிலையில், வகுப்புவா தத்தை தூண்டும் வகையில் பேசிய அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி சேகர் குமார் யாதவை தகுதி நீக்கம் செய்யக்கோரி நாடாளுமன் றத்தில் எதிர்க்கட்சிகள் சார்பில் நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது. கபில் சிபல், கே.டி.எஸ்.துளசி, பி. வில்சன் உள்ளிட்ட 55 எம்.பிக்கள் இந்த நோட்டீஸில் கையெழுத்திட் டுள்ளனர்.

### முல்லைப் பெரியாறு அணை பராமரிப்புப் பணிகளுக்கு

# கட்டுமானப் பொருள்களை எடுத்துச் செல்ல - கேரள வனத்துறை அனுமதி!

## தமிழ்நாடு அரசின் கோரிக்கை ஏற்பு! தேனி மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு!

தேனி, டிச. 14-

தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று முல் லைப் பெரியாறு அணை பராமரிப்புப் பணிகளுக் காக கட்டுமானப் பொருட் களை எடுத்து செல்ல கேரள அரசின் வனத்துறை அனு மதி அளித்துள்ளது என தேனி மாவட்ட ஆட்சித்த லைவர் அறிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வரு மாறு:-

தேனி மாவட்டம், உத்த மபாளையம் வட்டம் முல் லைப் பெரியாறு அணை யில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள, வாகனங்கள் மூலம் கட்டுமானப் பொரு ள்களை எடுத்துச் செல்ல கேரள வனத்துறையிடம் முறையாக அனுமதி பெறப் பட்டுள்ளது.

தேனி, திண்டுக்கல், மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய மாவட் டங்களின் குடிநீர், பாசன ஆதாரமாகத் திகழும் முல் லைப்பெரியாறு அணை தமிழக கேரள எல்லையில் அமைந்துள்ளது.

தமிழ்நாடு அரசு பொதுப் பணித்துறையின் சார்பில், முல்லைப்பெரியாறு அணைப்பகுதியில் ஆண்டு தோறும் மராமத்துப் பணி மேற்கொள்ளப்படுவது வழக்கம். இந்நிலையில் பொதுப்பணித்துறையின் சார்பில் கடந்த டிசம்பர் 4 ஆம் தேதி, தேனியிலிருந்து 2 தனியார் லாரிகளில் தள வாடப் பொருள்களை ஏற் றிக் கொண்டு, இடுக்கி மாவட்டம், குமுளி வட் டம் வல்லக்கடவு வழியாக முல்லைப் பெரியாறு அணை க்குக் கொண்டு சென்றனர்.

சோதனைச் சாவடியில் முல்லைப் பெரியாறு அணைக்குப் பொருள்கள் எடுத்துச் செல்ல கேரள வனத்துறையினரிடம் உரிய அனுமதி பெற்ற பின்னரே அனுமதிக்கப்பயடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, தேனி மாவட்ட ஆட்சித்த லைவர் அவர்களால், தமிழ் நாடு அரசின் கூடுதல் தலை மைச்செயலாளர் (நீர்வளத் துறை) அவர்களுக்குத் தக வல் தெரிவிக்கப்பட்டு, கேரள அரசின் மூலம் வல்லக்கடவு சோதனைச் சாவடி மற்றும் தேக்கடி படகு இறங்கு தளம் வழியாக முல்லை பெரியாறு அணைப் பகுதிக் குக் கட்டுமான பொருள்க ளைக் கொண்டு செல்வ தற்கு அனுமதி பெறப்பட் டுள்ளது.

இவ்வாறு தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, தெரிவித்துள்ளார்.



மலேசியா நகரில் நேற்று முன்தினம் 12.12.2024 துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை மலேசிய கழகத் தோழர்கள் முன்னிலையில் கழகத்தின் அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சட்டத்துறை இணைச் செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான், செய்தி தொடர்பு துணைச் செயலாளர் டாக்டர் ஹபீஸ் சுல்லா மற்றும் நாகை ஏ.கே.எஸ்.முருகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு கேக் வெட்டி கொண்டாடினர். உடன் மலேசியா அயலக அணி பொறுப்பாளர் முகமது பிர்தௌஸ் கான், துணை பொறுப்பாளர் முகமது ஜெய்லானி, தொழிலதிபர். சாகுல் ஹமீது மற்றும் அயலக அணி நிர்வாகிகள் சார்லஸ், ஹமீது, முகமது ஷபீக், மலேசியா தளபதி பேரவை ஜெய்னுதீன், ஏ.கே.பி.ஆரிப் சிவா, அறந்தாங்கி ராஜா முஹம்மது, சிங்கப்பூர் நிர்வாகிகள் உடன் கலந்து கொண்டனர்.

### உலக செஸ் சாம்பியன்

# குகேஷுக்கு ரூ.5 கோடி பரிசு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு !

**சென்னை, டிச. 14 –**

**‘உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டி யில் வெற்றி பெற்றுள்ள தமிழ்நாட டைச் சேர்ந்த டி.குகேஷ் அவர் களுக்கு 5 கோடி ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படும்’ என தமிழ் நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது தலை மையிலான அரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறைக்கு சிறப்பான முக்கியத்து வத்தை அளித்து வருகின்றது.



துணை முதலமைச்சர் உதய நிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற திலிருந்து, பல்வேறு சர்வதேச விளையாட்டுப் போட்டிகளும், மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளும் தமிழ்நாட்டில் அனைவரும் பாராட்டும் வண் ணம் நடத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக, உலக செஸ் சாம்பியன் ஷிப் போட்டிகள் தமிழ்நாட்டில் கடந்த 2022 ஆம் ஆண்டு மிகச் சிறப்பாக திட்டமிட்டு, நடத்தப்பட் டன. அதில் பங்குபெற்று வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து வீரர்களையும் முதலமைச்சர் அவர்கள் நேரில் அழைத்துப் பாராட்டி, பரிசுகளை வழங்கினார்.

தற்போது சிங்கப்பூரில் நடை பெற்ற உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் (FIDE World Champi onship 2024) தமிழ்நாட்டைச் சேர்ந்த டி.குகேஷ் அவர்கள் நேற்று நடப்பு சாம்பியனான சீனாவின் டிங் லிரென் அவர்களை வென்று சாதனை படைத்துள்ளார்.

மிக இளம் வயதிலேயே உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் வென்று உலக செஸ் சாம்பியனாக வாகைசூடி சாதனை படைத்து, இந் தியாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்த டி. குகேஷ் அவர் களை முன்னதாக தனது எக்ஸ் தளத்தில் பாராட்டி வாழ்த்தி தமிழ் நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டிருந்த தோடு, தொலைபேசி வாயிலாக வும் அவரைத் தொடர்பு கொண்டு வாழ்த்துத் தெரிவித்தார்.

தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ள குகேஷ் அவர்களுக்கு 5 கோடி ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கிட வேண்டுமென்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சர் அவர்களுக்குக் கோரிக்கை விடுத் திருந்தார். அதனையேற்று, டி.குகேஷ் அவர்களை மேலும் ஊக்குவிக்கும் வகையில், அவ ருக்கு 5 கோடி ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படும் என்றும் தமிழ் நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித் துள்ளார்.

### மாற்றுத்திறனாளி மாணவர்களின் நலனுக்காக

# சென்னையில் புதிய திறன் பயிற்சி மையம் அமைக்க ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு!

## அமைச்சர் - முனைவர் கோவி. செழியன் தகவல்!

சென்னை, டிச.14-

மாற்றுத்திறனாளி மாணாக்கர்களின் நலனுக் காக சென்னை மைய பலவ கைத் தொழில்நுட்பக் கல் லூரியில் புதிய திறன் பயிற்சி மையம் அமைக்க ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியி டப்பட்டுள்ளது என உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

மாற்றுத்திறனாளிகளின் நலனைப் பேணிக் காத்திட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியாவிலேயே முதல் முறையாக மாற்றுத்தி றனாளிகளின் நல்வாழ்விற் காக தனித்துறையை உரு வாக்கினார். மேலும், அவர்கள் உரிய மரியாதையு டன் அழைக்கப்பட வேண் டும் என்ற நோக்கத்தோடு “மாற்றுத்திறனாளிகள்” என்ற சொல்லையும் அறிமு கப்படுத்தினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில், முதல மைச்சர் அவர்கள் தலைமை யிலான அரசு மாற்றுத்திற னாளிகளுக்கு மாதாந்திரப் பராமரிப்பு உதவித் தொகை, பள்ளி, கல்லூரிக ளில் பயிலும் மாற்றுத்திற னாளி மாணவ, மாணவியர் களுக்கு கல்வி உதவித் தொகை, மாற்றுத்திறனாளி களுக்கு நவீன உதவி உபகர ணங்கள், அரசு நகரப் பேருந்துகளில் கட்டணமில் லாப் பயணச் சலுகை மற் றும் பிற மாவட்டங்களுக்கு அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் தனியா கவோ அல்லது துணையா ளர் ஒருவருடனோ பய ணம் செய்ய 75% பயண கட்டண சலுகை வழங்கு வது என மாற்றுத்திறனாளி கள் சமுதாயத்தில் சுயமரி யாதையுடனும், சம உரிமையுடனும் வாழ பல் வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் “எல்லோ ருக்கும் எல்லாம்” என்ற சூழலை உருவாக்கும் இலக்கை நோக்கிப் பயணிக் கும் தமிழ்நாடு முதலமைச் சர் அவர்களின் தலைமையி லான அரசு, 2023-2024-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை யில் தெரிவித்துள்ளபடி “செவித்திறன் குறைந்த மற் றும் வாய் பேச இயலாத மாற்றுத்திறனாளி மாணாக் கர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பற்றவைத்தல், மின்னணு வியல் பாகங்களைத் தொகுத்தல், மின்னணுவி யல் பலகைகளை பரிசோ தித்தல் ஆகிய திறன்களில் பயிற்சி அளிப்பதற்காக சென்னை மைய பலவகை தொழில்நுட்பக் கல்லூரி யில் புதிய திறன் பயிற்சி மையம் அமைக்க உயர்கல் வித் துறையின் மூலம் ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக் கீடு செய்து அரசாணை வெளியிட்டுள்ளது.

இந்த திறன் பயிற்சி மையத்தில் மின்கம்பியாளர் கட்டுப்பாட்டு பலகை எலக்ட்ரானியல் (Wireman control Panel Electronics), மின் கம்பிச்சுற்று காப்புப்பொ ருத்தும் செய்குநர் (Wiring Harness Assembly Operator) ஆகிய பாடப்பிரிவுகள் அமைக்கப்படவுள்ளது. 8-ஆம் வகுப்பு தேர்ச்சிபெற்று, இரண்டு வருட படிப்பிற் கான தேசிய தரச்சான்றிதழ் (National Trade Certificate) பெற்ற மாற்றுத்திறனாளி கள் / அதற்கு இணையாக இரண்டு வருட அனுபவம் உள்ள மாற்றுத்தினாளிகள் அல்லது 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாற்றுத்திற னாளிகள் இந்த பாடப்பிரி வில் சேர்ந்து பயில தகுதியு டையவர்கள் ஆவார்கள்.

மேற்கண்ட இரு பாடப் பிரிவுகளிலும் தலா 6 மாத காலத்திற்குப் பயிற்சி வழங் கப்படும். ஒவ்வொரு பாடப்பிரிவிலும் தலா 30 மாற்றுத்திறனாளி மாணவர் கள் சேர்க்கைக்கு அனுமதிக் கப்படுவார்கள்.

மாற்றுத்திறனாளிகளின் திறனை வெளிப்படுத்தும் வகையிலும், உயர்கல்வி பயில வேண்டும் என்ற அவர்களின் எண்ணத்தை நிறைவேற்றும் வகையிலும் இந்த திறன் பயிற்சி மையம் அமையும். மாற்றுத்திற னாளி மாணவர்கள் இத் திட்டத்தினை பயன்படுத் திக்கொள்ள வேண்டும் என உயர்கல்வித்துறை அமைச் சர் தெரிவித்துள்ளார்.



செம்பரம்பாக்கம் ஏரியின் உபரிநீர் வெளியேற்றத்தைத் தொடர்ந்து, நேற்று (13.12.2024) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சைதாப்பேட்டை ஆடுதொட்டி அருகில் உள்ள செட்டித் தோட்டம் பகுதியில் உள்ள அடையாறு ஆற்றங்கரையோரப் பகுதிகளில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மண்டலக் குழுத் தலைவர்கள் ஆர்.துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் தா.மோகன் குமார் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.